*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1999ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, அம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II **ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

[*1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.— ஓ 1/97*

**சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதியை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும், சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத் தொகுதி என அழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கான தொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :—

1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

*சுருக்கப் பெயரும் நடை முறைக்கு வரும் தேதியும்.*

### பாகம் 1

### சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

2. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை என அழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

*சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபையைத் தாபித்தல்.*

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு ஒதுக்கப்பட்ட பெயரின் பிரகாரம், இடையறாவழியுரிமை மற்றும் பொது இலச்சினை ஒன்று கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகார சபையின் முகாமைச் சபை.*

3. (1) அதிகாரசபையின் அலுவலர்கள் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யபடும்) முகாமைச்சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதலும், முகாமை செய்யப்படுதலும் வேண்டும்.

(2) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மூன்று பதவிவழி உறுப்பினர்கள் ; அதாவது –

(i) விளையாட்டுக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அவரிளர் பிரதிநிதி ;

(ii) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் ;

(iii) திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள். அவர்களுள் மூவர் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும். (இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.)

(3) அமைச்சர் , சபையின் உறுப்பினர்களில்ஒருவரை அதிகாரசபையின் தவிசாளராக இருப்பதற்கு நியமித்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையின் ஏற்பாடுகள், தவிசாளரின் பதவி நியதிகள் அத்துடன் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிசாளரினால் அத்துடன் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களினால் பதவி வறிதாக்கப்படுதல் அத்துடன், சபையின் கூட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் இலச்சினை தொடர்பில் பயனுறுதல் வேண்டும்.

(5) சபையானது, இச்சட்டத்தினால் அதிகாரசபைமீது சுமத்தப்படும் அல்லது அதற்கு ஒதுக்கப்படும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்ததும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

4. (1) அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாறாதல் வேண்டும் :—

*அதிகார சபையின் பணிகள்.*

(அ) சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதியை முகாமைசெய்தல் அத்துடன் பேணுதல் ; அத்துடன் அதை தேசிய சொத்தொன்றாகப் பாதுகாப்பதற்கு அவசியமான நவடிக்கைகளை எடுத்தல் ;

(ஆ) சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி தொடர்பிலான எல்லாச் சௌகரியங்களையும், வசதிகளையும் பேணுதல் ;

(இ) சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி யில் உள்ள கட்டிடங்களிலும், கட்டமைப்புகளிலும் அவசியம் ஏற்படுகின்றவிடத்து, முன்னேற்றங்களை அல்லது மாற்றங்களைச் செய்தல் ;

(ஈ) சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத் தொகுதியில் உள்ள வசதிகளை சபையினால் சுமத்தப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனையின்மேல் இலங்கைப் பிரசைகளுக்கு, குறிப்பாக இலங்கை இளைஞர்களுக்கு விளையாட்டுகளில் அவர்களிடம் மறைந்துகிடக்கும் திறனை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு அத்துடன் அவர்களின் உடல் திடத்தையும், ஆரோக்கியத்தையும் முன்னேறும் நோக்கங்களுக்காக, கிடைக்கக் கூடியதாகச் செய்தல் ;

(உ) குறிப்பாக கிராமங்களில் விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதைக் கருத்திற்கொண்டு, விளையாட்டுக்களில் பயிற்சிநெறிகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துதல் ;

(ஊ) தேசிய மற்றும் சர்வதேச விழாக்களுக்காக சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதியில் வசதிகளை, சபையினால் சுமத்தப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளின்மேல், கிடைக்கக் கூடியதாகச் செய்தல் ;

(எ) இலங்கையில் விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சர்வதேச அத்துடன் உள்ளூர் விளையாட்டுக்கள் பயிற்சி ஒழுங்கமைப்புகளுடனும், விளையாட்டுகள் நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுதல் அத்துடன் அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் ;

(ஏ) சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் வசதிகளை நியாயமான கட்டணங்களில் சபையினால் சுமத்தப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனையின் மேல் பள்ளிக்கூடங்களுக்கும் , இளைஞர் களரிகளுக்கும் அத்துடன் விளையாட்டு ஒழுங்கமைப்புகளுக்கும் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் ;

*அதிகார சபையின் தத்துவங்கள்.*

**5**. அதிகாரசபைக்கு பின்வரும் தத்துவங்கள் இருத்தல் வேண்டும் :—

(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும் அத்துடன் அதை அடகுவைப்பதற்கும் அல்லது விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும் அல்லது வாடகைக்கு விடுவதற்கும், கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியே இருந்தோ ஏதேனும் அரசாங்கத்திடமிருந்தோ, எவரேனும் ஆட்கள் குழுக்களிடமிருந்தோ அல்லது எவையேனும் ஆட்கள் குழுக்களிடமிருந்தோ அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல் ;

(இ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களிலும் ஈடுபடுதல் ; அத்துடன் புரிதல் ;

(ஈ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ; அத்துடன் அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ; அத்துடன் அவர்களை வேலையிலிருந்து நீக்குதல் ;

(உ) அத்தகைய அலுவர்களுக்கு அத்துடன் சேவையாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல் ; அத்துடன் அவர்களின் சேவை, நிபந்தனைகளைத் தீர்மானித்தல் ;

(ஊ) அதனால் அளிக்கப்படும் அல்லது வழங்கப்படும் சேவைகளுக்காகவும் வசதிகளுக்காகவும் கட்டணங்களை விதித்தல் ;

(எ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பில்லாமலோ பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(ஏ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, பயிற்சிநெறிகளை, பயிற்சிப் பட்டறைகளை அத்துடன் கருத்தரங்குகளை நடாத்துதல் ;

(ஐ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புகளில் அதன் பயன்படுத்தப்படாத பணங்களை முதலீடு செய்தல் ;

(ஒ) அதன் பணிகளை நிறைவேற்றவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாக இருக்கக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

## பாகம் II

### பணியாட்டொகுதி

*அதிகாரசபை தத்தவங்களைக் கையளித்தல்.*

**6.** (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான நிபந்தனைக்கு அமைய, அதிகாரசபையில் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு, அதன் அலுவல் களை திறமையாகச் செய்வதற்கு, இச்சட்டத்தினால் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(2) அத்தகைய கையளிப்பானது எப்படியிருப்பினும், சபை, அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

*அதிகார சபையின் பணியட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**7.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் அத்துடன் பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்பட்ட வாறான அத்தகைய காலப்பகுதிக்குஅதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரசபையின் பணியாட்டொகுதித்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, அவ்வலுவலருக்கும் அவர் தொடர்பிலும், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் 3 ஆம் உம்பிரிவு, அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

*(4)* குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவை செய்வதற்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டிருக்கின்ற ஆள் எவரையும் அதிகாரசபை வேலைக்கு அமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகார சபைக்குப் புரியப்படும் சேவைக் காலப்பகுதி எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் தமது கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்கு அவரினால் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் ேண்டும்.

## பாகம் III

### *நிதி*

**8.** *(1)* அதிகாரசபைக்கு அதன் சொந்த நிதியம் இருத்தல் வேண்டும்.

*அதிகாரசபையின் நிதியம்.*

*(2)* நிதியானது, "சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி நிதியம்" (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என அழைக்கப்படுதல் வேண்டும்.

*(3)* பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:

*(அ)* 1995, ஒற்றோபர் 25 எனத் தேதியிடப்பட்ட அமைச்சரவை முடிவைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் வரவில், நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று இருக்கின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

*(ஆ)* அதிகாரசபையின் பயன்பாட்டுக்கென வருடந்தோறும் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப்பணத் தொகைகளும் ;

*(இ)* உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து மானியங்களாக, கொடைகளாக அல்லது நன்கொடைகளாக அதிகார சபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) அதிகாரசபையினால் அளிக்கப்படும் அல்லது வழங்கப்படும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காக அல்லது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிக்கையில் அல்லது நிறைவேற்றுகையில், கட்டணங்களாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் மூலம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) சுகததாச தேசிய விளையாட்டு நம்பிக்கை நிதியத்தின் ஏதேனும் பெறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்றவாறானவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளனவுமான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) சபையானது, அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வேறு கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையானது அதிகாரசபையின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

**10.** சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகம் அதிகாரசபைக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப் படுகிறது.

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பாகம் ஏற்புடைத்தாதல்.*

### பாகம் IV

*பொது*

**11.** அமைச்சர், காலத்திற்குக்காலம், அதிகாரசபையின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் அத்துடன் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கான பொதுவான அல்லது விசேட பணிப்புரைளை எழுத்தில் சபைக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுவது சபையின் கடமையாதலும் வேண்டும்.

*பணிப்புரைகளை வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**12.** அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

*அதிகார சபையின் அலுவலர்களும் சேவையாளர் களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக் காகப் பகிரங்கச் சேவையாளர் களாகக் கருதப் படல் வேண்டும் என்பது.*

**13.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபை, இலஞ்சச் சட்டதின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படல் வேண்டும்.*

செயலுக்கான பாதுகாப்பு.

**14.** *(1)* இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது, அத்தகைய உறுப்பிளர், அலுவலர் அல்லது சேவையாளரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்டசெயல் எதற்காகவும் சபையின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக அல்லது அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அல்லதுசேவையாளருக்கெதிராக துடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்புஎதுவும் தொடுக்கப்படுதலாகாது.

*(2)* ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர், அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் அதிகாரசபையினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் என்பதடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாசபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

*(3)* இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது ஆளெவரினாலும் செய்யப்பட்டதான அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்டதான ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்குத்தொடுப்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள் நீதிமன்றமானது அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது எனக் கொண்டால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது வழக்குத்தொடுப்பில் அத்தகைய செலவினங்கள் அவரால் அறவிடப்பட்டாலொழிய,நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**15.** *(1)* அமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

*(2)* ஒராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்திற்கெனக் கொணரப்படுதல் வேண்டும் என் பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு நீக்கப்பட்ட தெனக் கருதப்படுகின்ற தேதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நிலைமாறு கால ஏற்பாடு.

**16.** (1) சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதியின் நோக்கங்களுக்காக தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று தொழிலில் இருந்தவருமான ஆள் ஒவ்வொருவருக்கும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று அவரால் அனுப்பிவைக்கப்பட்ட நியதி, நிபந்தனைகளுக்குக் குறையாத நியதி, நிபந்தனைகளில் அதிகாரசபையில் தொழில் வழங்கப்படல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட வேலைவாப்பை ஏற்றுக்கொள்ளாத ஆள் எவருக்கும், நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப் பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈடு செலுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**18.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"மாகாணசபை", என்பது அரசியலமைப்பின் xvii அ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒன்று என்று பொருள்படும்.

"சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டடத்தொகுதி", என்பது இச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பில் உள்ளடங்கியுள்ள காணியும் கட்டடங்களும் என்று பொருள்படும்.

**முதலாம் அட்டவணை** [(பிரிவு 3(4)]

1. ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாணசபை உறுப்பினர் ஒருவராகவிருந்தால் அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. அமைச்சர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அதற்கான காரணம் எதனையும் காட்டாது அகற்றலாம்.

3. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்குஅதன் சார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் ஒன்றின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவிவிலகலகனது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பதவிவிலகல் பயனுடையதாதல் வேண்டும்.

4. இரண்டாம் 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம், அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று வருடங்களாகவிருத்தல் வேண்டும்.

5. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பினால், பதவிவிலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலினால் பதவியை வறிதாக்குகின்றவிடத்து அமைச்சர் அவரின் இடத்திற்கு இன்னோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்படும் ஆள் அவர் எவ்வாளை அடுத்து வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

6. சபையின் தவிசாளர் அல்லது நியமிக்கப்பட்டஉறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் ஏதுவினால் அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், அத்தகைய தவிசாளராகச் செயலாற்றுவதற்கென சபையின் வேறொரு உறுப்பினரைஅல்லதுவிடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொரு ஆளை நியமிக்கலாம்.

7. காலம் கழிவதால் பதலியை வறிதாக்கும் சபையின் நியமிக்கப்பட்டஉறுப்பினர் ஒருவர்மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

8. அமைச்சர், அதற்கான காரணம் எதனையும் கொடுக்காமல் தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

9. தவிசாளர் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் ஒன்றின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகலானது அமைச்சரால்ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பயனுக்கு வருதலும் வேண்டும்.

10. எட்டாம், 9 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் சபையில் அவரது உறுப்பாண்மைக் காலமாகவிருத்தல் வேண்டும்.

11. சபையின் எல்லா அல்லது எவரேனும் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து வழங்கப்படலாம்.

12\. (அ) தவிசாளர் சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும் சபையின் ஏதேனும் கூட்டத்தல் தவிசாளர் சமுகமளிக்காதவிடத்து அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அதற்குத் தலைமைவகித்தல் வேண்டும்.

(ஆ) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் நான்காக விருத்தல் வேண்டும்.

(இ) உட்பந்திகள் (அ) அத்துடன் (ஆ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களால் அலுவல்கள் கையாளப்படுதல் தொடர்பான நடை முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

13. சபையானது ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

14. சபையின் செயல் அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணத்தினால் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரது நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாட்டின் காரணத்தினால் மட்டும் வலிதற்றதாதலாகாது.

15\. (அ) அதிகாரசபையானது அதன் சொந்த இலச்சினையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அதிகாரசபையின் இலச்சினையானது சபையின் அனுமதி யுடனன்றியும் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையின்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலகாது. அவர்கள் தாம் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.